

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 287 மாணவர்களுக்கும், மஹாவீர் ஜெயின் பள்ளியை சேர்ந்த 35 மாணவர்களுக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் சுப்பையன் மற்றும் திருமதி.மஞ்சு ஆகியோர் தலைமையில் நடைபெற்ற 11 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் மாநில மீனவரணி துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்துகொண்டு மிதிவண்டிகள் வழங்கி திராவிட மாடல் அரசு மாணவ மாணவியருக்கு செய்து வரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் ஜெய் கோபால் கரோடியா அரசு மேல்நிலைப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வி.ராமநாதன், கே.தேசிங்கு, எம்.எஸ். பாண்டியன், எஸ்.செல்வம், டி.மகேந்திரன், பிரட் சுரேஷ், சந்தான கிருஷ்ணன், மூர்த்தி, எல்லப்பன், எம்.சின்னா, சரவணன், மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### ‘என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச் சாவடி’ – கலைஞர் நகர் தெற்கு

# 137 ‘அ’ வட்டத்தில் தெருமுனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் கே.கண்ணன் வேண்டுகோள்!

சென்னை, டிச.20-

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்ரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதி, 137 அ வட்டத்தில் 20.12.2025 மாலை 4 மணிக்கு 207 பாகம் பாக தலை வர் எஸ். புனிதகுமார் தலைமையில் அய்யாவு புரம் கம்பர் நகரிலும், மாலை 5 மணிக்கு 209வது பாகம், பாக தலைவர் அ. இளங்கோ தலைமையில் 55வது தெரு, 10வது செக்டாரிலும் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" தெருமுனைக் கூட்டம் வட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன் முன்னிலையில், தலைமை கழக பொறுப்பாளராக விருகம்பாக்கம் எம்.எல்.ஏ., AMV பிரபாகர்ராஜா நடத்த உள்ளார்.

இதில் கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன், தெற்கு பகுதி செயலாளர் கே.கண்ணன், தொகுதி பொறுப்பாளர் வே. உமாகாந்த், பொதுக்குழு உறுப்பினர் பாக பொறுப்பாளர் பி. எஸ் முருகேசன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். பாக உறுப்பினர்கள், பாகத்துக்குட்பட்ட நிர்வாகிகள், பாகத்துக்குட்பட்ட திமுக கழகத்தினர், கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் சோழவரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சின்னம்பேடு ஊராட்சியில் உள்ள பாக எண்கள் 239 பகுதிகளில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் ஒன்றிய கழக பொறுப்பாளர் வே.ஆனந்த் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் பரப்புரை மேற்கொண்டு தி.மு.க. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கினார் உடன் மு.பகலவன், ரமேஷ், சந்துரு, மனோஜ், மைக்கல் உள்பட பலர் உள்ளனர்.

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா! மீ.வே.கர்ணாகரன் தலைமையில்

# சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் மாபெரும் ரத்ததான முகாம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் துவக்கி வைக்கிறார்! கே.பி.சங்கர் – ஜே.அருண் பங்கேற்பு!

சென்னை, டிச.20

கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் இரத்ததான முகாம் இன்று (20.12.2025 சனிக்கிழமை) காலை 8 மணி அளவில் வி.எம்.ஜி.பேலஸ் பாடியநல்லூரில் நடைபெறுகிறது.

இம்முகாமிற்கு எம். ஜெகன், ஏ.கே.கௌதம், ஆர். குமரன், என்.விஜய், ஆர். சி.சிவசங்க ரன், ஜே.மைக்டைசன், கே.கவியரசு, க. பிரபு, எஸ்.பார்த்திபன், கே. பாலாஜி, எம்.எஸ்.மணிகண்டன், ஆர்.ரூபேஷ், எஸ்.முத்துக்குமார், ஆர்.தினேஷ்குமார், எஸ்.திவாஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வழுதிகை நா.செல்வசேகரன், ஏ.காசிம் முஹம்மது, கே. எம்.துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ. அரசு, இரா.விஜயன், பா. சேகர், பொன்.கோதண்டன், எஸ்.டி.சுந்தர மூர்த்தி, எஸ். கே.மணி, பி.அரிஹரன், எஸ். ஆர்.எல்.எஸ்.தாமு, எம். ராமு, ஏ.ராஜசேகர், எம்.முத்தையா, எம்.ஜி.கார்த்திக், ஜெ.டில்லி, சி.ஜே.ராஜசேகர ராவ், எஸ்.நாகராஜ், எஸ். சதீஷ், எம்.வி.விக்னேஷ், ஏ. பிஸ்மில்லா, எஸ்.குணசேகரன், எஸ்.முத்துக்குமார், எம். முகமது அலி, எம்.அந்தோணி, பா.லட்சுமணன், கே.அருள்முருகன், பி.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்முகாமிற்கு சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் மீ.வே.கர்ணாகரன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு இரத்ததான முகாமை துவக்கி வைக்கிறார்.

இம்முகாமில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜே.அருண், வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், ஜி.சந்திரபோஸ், ஆர்.பத்மநாபன், பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராம கிருஷ்ணன், பி.அறிவழகி, எம். ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய்மதன், டி.ஏ. ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், ஜி. துக்காராம், புழல் எம்.நாராயணன், ஜி.தயாளன், சி.அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ.ஜான், என்.முகிலன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நா.பரசுராமன், என்.முகமது அலி, எம்.ஜி.கார்த்திக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பட்டினை ஒன்றிக் கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக செய்துள்ளார்.

### வட சென்னை வளர்ச்சி திட்டப்பணிக்காக

# திருவொற்றியூர் - மணலி பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, டிச.20-

வட சென்னை வளர்ச்சி திட்டப்பணிக்காக, மணலி காமராஜர் சாலையில் அமைந்துள்ள திருவொற்றியூர் நீருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் 1 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணியை செயல்படுத்துவதற்காக, அந்நிலையத்தின் பிரதான குடிநீர் குழாயை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 22.12.2025 அன்று காலை 10.00 மணி முதல் 24.12.2025 அன்று காலை 10.00 மணி வரை (48 மணி நேரம்) திருவொற்றியூர் நீருந்து நிலையம் மற்றும் மணலி நீருந்து நிலையம் தற்காலிகமாக செயல்படாது. ஆகையால், மண்டலம் - 1 (திருவொற்றியூர்) மற்றும் மண்டலம் - 2 (மணலி) -க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் வார்டு எண். பகுதிகள் மண்டலம்-1 (திருவொற்றியூர்) 1 முதல் 14 வரை கத்திவாக்கம், எண்ணூர், எர்ணாவூர், திருவொற்றியூர் மற்றும் காலடிப் பேட்டை மண்டலம்-2 (மணலி) 16 சடையன் குப்பம்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

### ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில்

# நாட்டரசன்பட்டு ஊராட்சியில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

சென்னை, டிச.20-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் - நாட்டரசன்பட்டு ஊராட்சியில் ‘என் வாக்குச் சாவடி.... வெற்றி வாக்குச்சாவடி....’ பரப்புரையை முன்னெடுக்கும் பாகம் எண்.307 பயிற்சிக் கூட்டம் இன்று (20.12.2025 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் வட மேல்பாக்கத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார். பாக நிலை முகவர் சி.க.இருசப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ. நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ. இராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதாசுமன், டி. லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, வசந்தி சாம்பசிவம், மஞ்சுளா கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இந்த கூட்டத்தில் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கலந்துகொள்ளுமாறு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (19.12.2025) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

